**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness – PW 1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அண்ணாதுரை |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025.

(A1 Died. A2, A3, A4 are present.

முதல் விசாரணை–

நான் மாவிளை ஊரில் வசித்து வருகிறேன். நான் ரைஸ்மில் வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் அவர்களை இன்று தான் பார்க்கிறேன். 01.06.2020 அன்று மாலை 4 மணிக்கு நான் மாத்திரை வாங்குவதற்காக அம்மாண்டிவிளை ஜங்சன் வந்தேன். ரோட்டினை கிராஸ் செய்வதற்காக அங்கும் இங்கும் பார்த்துகொண்டிருந்தேன். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த நான்கு நபர்கள் என்னை பார்த்து மண்டமவனே, கெண்ட மவனே என்று கெட்ட வார்த்தை பேசினார்கள். அந்த சமயம் நான் ஊரின் கௌரவ தலைவராக இருந்தேன். அதனால் எனக்கு அவமானமாகிவிட்டது. யார் என்னை அவ்வாறு பேசியது என்று நான் திரும்பி பார்த்து போது கேட்பதற்குள் முகேஷ், சதீஷ், அனீஷ் என்ற பையன் , மற்றொருவர் சேர்ந்து என்னை அடித்தார்கள். அப்போது சுப்பிரமணியம், ராஜ் ஆகியோர் வந்து தடுத்தார்கள் அவர்களையும் அடித்தார்கள். அதற்கு பின்னர் யாரும் கிட்டே வரவில்லை. எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது, என்னையும் அருகில் நின்ற அடி பட்டவர்களையும் பக்கத்தில் இருந்த ஒரு கடை திண்ணையில் உட்கார வைத்தார்கள். இரத்தம் சொட்ட நான் குனிந்து இருந்தேன் அப்போது அருகில் இருந்த கண்ணாடி மீன் தொட்டிஎடுத்து என் தலையில் போட்டு செத்து தொலை என்று சொல்லி அடித்தார்கள். அப்போது எனக்கு முகத்தில் காயம் ஏற்பட்டது. இரத்தம் அதிகாமாக வந்தது. அதனால் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. என்னை ராஜாக்கமங்கல்த்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமணைக்கு சிகிட்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனக்கு முதல் உதவி செய்த பிறகு, ஆசாரிபள்ளம் அரசு மருத்துமனைக்கு சிகிட்சைக்கு அழைத்து சென்றார்கள். இதுபற்றி Wattsup ல் போட்டிருந்தார்கள். அதனை சிடி எடுத்து மணவாளகுறிச்சி காவல் நிலையத்தில் கொடுத்தோம். போலீசார் மருத்துவமனைக்கு வந்து புகார் எழுதி வாங்கினார்கள். அத்துடன்

நான் என்னை அடித்த சிடியும் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ–1 ஆகும். அவ்வாறு அடிப்பட்டதில் எனக்கு பல் போய்விட்டது, பின்னர் பல்கட்டியிருக்கிறேன். கண் பார்வை சரியாக தெரியவில்லை. தற்போதும் கண்களுக்கு சொட்டு மருந்து விடுகிறேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான், போலீசார் விசாரணையின் போதும் கூறினேன் என்றால், சரிதான். என் கைப்பட நான் புகார் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால், சரிதான். அப்போது என்னால் எழுதமுடியவில்லை. போலீசார் வந்தபிறகு நான் சொல்ல சொல்ல, போலீசார் புகாரினை எழுதினார்கள் என்றால், சரிதான். நான் கடைக்கு மாலை 3.45 மணிக்கு கிளம்பினேன், சாலையை கடக்க முயன்றபோது இந்த சம்பவம் நடந்தது. நான் சாலையை கடக்க முயன்றபோது தான், வழக்கு சம்பவம் நடந்ததாக என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் கூறவில்லை என்றால், நான் சாலையை கடக்க பார்த்துக்கொண்டிருந்தேன். நான் சிடியை எந்த தேதியில் எந்த போலீசாரிடம் கொடுத்தேன் என்று நினைவில் இல்லை. மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் சிடியை கொடுத்தேன். நான் சாலையை கடக்க முயற்ச்சி செய்தபோது அங்கு வந்த நபர்களிடம் நான் மெதுவாக போங்கடா என்று சொன்னபோது தான் வழக்கு சம்பவம் நடந்தது என்றால், நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அது நாலுமுக்கு ஐங்சன். நின்று தான் போகவேண்டும். வழக்கு சம்பவம் நடந்தபோது நான் ஊரின் கௌரவ தலைவர் பதவியில் இருந்தேன் என்றால், சரிதான். நான் பிரபலமான ஒரு அரசியல் கட்சியில் பொறுப்புள்ள பதவியிலும் இருந்தேன் என்றால், சரிதான். எனவே எனக்கு காவல் நிலையத்தில் எனக்கு செல்வாக்கு உண்டு என்றால், அரசியல் வாதியை அடித்துவிட்டேன் என்று சத்தம் போட்டுக் கொண்டு போனார்கள். அடிபட்டு இரத்ததோடு நான் குனிந்து கிடந்தபோது அந்த

இடத்தில் தரையில் இரத்தம் சிந்தியிருந்தது என்றால், சரிதான். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது , எனது மனைவி. வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் திராவிட முன்னேற்ற கழக அலுலவகம் இருக்கிறது என்றால், சரியல்ல. வழக்கு சம்பவ இடத்தை நானும், சுப்பிரமணியன் என்பவரும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக நடந்து கொண்டேன் என்றாலும், அதனால் ஏற்பட்ட கலகத்தில் நான் கீழேவிழுந்தபோதுதான் எனக்கு காயங்கள் ஏற்பட்டன என்றால், சரியல்ல. முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டது போல எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன தனியார் மருத்துவமனைக்கு, சம்பவம் நடந்த 1/2 மணிக்குள் சென்றுவிட்டோம். சாட்சி சுப்பிரமணியன் எனக்கு நன்கு பழக்கம் ஆனவர். அவரும், நானும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக கலகம் ஏற்படுத்தியதால் தான் எனக்கு அடிபட்டது என்றாலும், எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் முதல் விசாரணையில் நான் குறிப்பிட்ட நபர்களுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றாலும், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு அ.சா.ஆ–1ல், அடித்தல், திருத்தல், இடைசெருகல் இருக்கின்றன என்றால், சரிதான்.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.50/2024**
**Prosecution Witness – PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025.

(A1 Died. A2, A3, A4 are present)

முதல் விசாரணை–

நான் அம்மாண்டிவிளை ஐங்சனில் வடக்கு பகுதியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இன்னும் ஒருவர் உண்டு அவர் இறந்து விட்டார். 01.06.2020 அன்று மாலை 4 மணியளவில் நான் கடைக்கு சாதனம் வாங்க போனபோது அண்ணாதுரையை அடித்த பிரச்சனை நடந்தது. அதனை நான் பார்த்தேன். நான்கு பேர் உண்டு அதில் அனித் என்ற பையன் இறந்துவிட்டார். பாக்கி மூன்றுபேர் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். நான் விலக்கி பிடித்தபோது என்னையும் கன்னத்தில் கைகொண்டு குத்தினார்கள். பின்னர் கேஸ் கொடுத்தார்கள். அண்ணாதுரையின் மனைவி வந்தார்கள். அண்ணாதுரைக்கு அடித்தது யார் என்று தெரியாத அளவிற்கு முகத்தில் அடிப்பட்டது. ஆஜர் எதிரிகள் இரண்டு பைக்கில் வந்திருந்தார்கள். பின்னர் அண்ணாதுரையை மருத்துவமனைக்கு கூட்டி போனார்கள். நானும் அவர்களுடன் மருத்துவமனைக்கு போனேன். எதிரிகள் அந்த இடத்தில் இருந்து பைக்கில் போய்விட்டார்கள். நான் தனியார் மருத்துவமனையில் காயங்களுக்கு சிகிட்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரித்தபோது நீதிமன்றத்தில் தற்போது நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட விபரங்களை சொல்லவில்லை என்றால், சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு சுமார் 1/2 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும். வாணி ஸ்டுடியோவிற்கு கிழக்கே பண்டாரத்தின் பலசரச்கு கடை, டீ கடை, பிளம்பிங் கடை ஆகியவை உள்ளன. காவல் நிலையம் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சம்பவம் இடம் அதிக மக்கள் நெரிசல் உள்ள பகுதி என்றால், சரியல்ல. நானும், அண்ணாதுரையும் மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் விதத்தில் நடந்துகொண்டபோது ஏற்பட்ட கலகத்தில் தான் எனக்கும், அவருக்கும் காயங்கள் ஏற்பட்டன என்றால், சரியல்ல. சம்பவம் நடத்து 1/2 மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். நான் சொன்ன விதத்தில், இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் அ.சா.1 அண்ணாதுரைக்கு ஆதரவாக, உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் குறிப்பிடுவதுபோல சம்பவ இடத்தில் எந்த கடையும் கிடையாது என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் ஏதும் கிடையாது என்றால், சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness – PW 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரத்தினசாமி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025.

(A1 Died. A2, A3, A4 are present)

முதல் விசாரணை–

நான் சாத்தன் விளையில் வசித்துவருகிறேன். நான் அம்மாண்டிவிளை ஜங்கனில் டீ கடை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 01.06.2020 மாலை 4 மணியளவில் அண்ணாதுரை எனது கடையில் டீ குடித்துவிட்டு கொஞ்சம் தெற்கு பக்கம் சென்றார். இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் ஏன் ரோட்டில் நிற்கிறாய் என்று கேட்ட சத்தம் கேட்டது. நான்குபேர் தெற்கு ரோட்டிற்கு போய், நேரே வடக்கு ரோட்டிற்கு வந்தார்கள். அப்போது அண்ணாதுரை தெற்கில் இருந்து வடக்கே வந்தார். அங்கு வைத்து அடி நடந்தது. அதனை இரண்டு மூன்றுபேர் விலக்கி பார்த்தார்கள், விலக்க முடியவில்லை. எனது கடைக்கு எதிரே அண்ணாதுரை ஒரு கடையில் உட்கார்ந்து இருந்தார், அப்போது ஒரு பையன் ஓடி வந்து அங்கிருந்த கண்ணாடி தொட்டியை எடுத்து அவருடைய தலையில் அடித்தார். அடித்துவிட்டு வடக்கே இருசக்கர வாகனத்தில் ஏறிஓடிவிட்டார். அவ்வளவு தான் நான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையிலும் நான் இப்பொழுது சாட்சியம் அளித்த விபரங்களை தவிர வேறு விபரங்களை கூறவில்லை என்றால், சரிதான். தர்மலிங்கத்தின் வீட்டிற்கும், எனது கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், தர்மலிங்கத்தின் வீடு என் கடைக்கு பக்கத்தில் இல்லை. என் கடைக்கு பக்கத்தில் எப்பொழுதும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். அண்ணாதுரை ரோட்டை கிராஸ் செய்ய முற்படும்போது சம்பவம் ஏற்பட்டது என்றால், சரியல்ல. அவர் வடக்கே போய் அவருடைய வீட்டிற்கும் திரும்பும்போது சம்பவம் ஏற்பட்டது. நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், நான் குறிப்பிடுவது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றாலும், சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், சம்பவத்திற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றால், சரியல்ல.

4ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.

நீதிமன்ற கேள்வி : உங்களுடைய டீ கடையின் பெயர் என்ன ?
பதில் : திவ்யா டீ ஸ்டால்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness - PW4**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. அன்னமணி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025.

(A1 Died. A2, A3, A4 are present)

முதல் விசாரணை–

நான் மாவிளையில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக ரைஸ்மில் வைத்திருக்கிறேன். அ.சா.1 அண்ணாதுரை எனது கணவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான்குபேரில் ஒருவர் இறந்துவிட்டார். அது கொரோனா சமயம். நான் என் வீட்டின் முன்பு உள்ள எனது ரைஸ்மில்லின் வாசலில் நானும் எனது கணவரும் இருந்தபோது அவர் பல்வலி என்பதற்காக மாத்திரை வாங்க போனார். நான் வீட்டின் முன்பு இருந்து பார்த்துகொண்டிருந்தேன். அங்கிருந்து என் கணவரை அடிப்பது எனக்கு தெரிந்தது. அப்போது நான் ஓடி போனேன். அவருக்கு முகத்தில் காயம் பட்டு முழுவதும் இரத்தமாக இருந்தது. அவரை பிடித்து கொண்டு ஒரு இடத்தில் உட்கார வைத்திருந்தார்கள், அப்போது ஒதுக்கி வைத்திருந்து கண்ணாடி மீன்தொட்டியை அவரின் தலையில் போட்டார்கள். கண்ணாடி துண்டுகள் குத்தி இரத்தம் வந்தது. அவரால் எதுவும் பேசமுடியவில்லை, நினைவு தப்பி விட்டது. அவருக்கு முதலில் PPM மருத்துவமனையில் முதல் உதவி செய்து பின்னர் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். 15 நாட்களுக்கு மேல் உள் நோயாளியாக என் கணவர் சிகிட்சை எடுத்தார். அவருக்கு வலது கண்ணில் அடிபட்டு தலையல் போடப்பட்டது. பல் விழுந்து பல் கட்டியிருக்கிறார்கள்.

இரவில் அவருக்கு தற்போது பைக் ஓட்டமுடியாது. தற்போதும் அவருக்கு பார்வை சரியாக இல்லை. போலீசார் என்னை விசாத்தார்கள்.

**<u>2 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை சம்பவம் நடந்த தினத்தன்று, ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது நானும் எனது கணவரும் மட்டும் தான் இருந்தோம். வேறு யாரும் இல்லை. போலீசார் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு இரவு 8 மணிக்கு வந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்னர் அங்கு என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், என் வீட்டில் இருந்து தெரியும். என் கணவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது நான் அவருடன் செல்லவில்லை என்றால், சரியல்ல. எனது முதல் விசாரணையில் தற்போது நான் கூறிய விபரங்களை தவிர வேறு விபரங்களை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால், அப்போதைக்கு சொன்னேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், அ.சா.1 எனது கணவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக , ஆஜர் எதிரிகளுக்கு எதிராக, தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்பே எனது கணவருக்கு பல் சம்பந்தமான உபாதைகள் உண்டு என்றால், எல்லோருக்கும் வரும் பல்வலி அவருக்கும் இருந்தது. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கின் சம்பவத்திற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றால், சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**